**10**

Register No. 1023

# முதல் திருப்புதல் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

**(செய்யுள், உரைநடை)**

**பகுதி – I (மதிப்பெண் – 15)**

**1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15 x 1 = 15**

**2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக**

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை...........
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது............
அ) பெரும் வணிகமும், பெரும் கலன்களும் ஆ) வணிகக் கப்பல்களும், ஐம்பெரும் காப்பியங்களும்
இ) ஐம்பெருங் காப்பியங்களும், அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும், அணிகலன்களும்

3. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது............
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6. சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும்............காலத்திற்குரியன.
அ) முன்பனி ஆ) பின்பனி இ) இளவேனில் ஈ) குளிர்

7. 'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும், வேலவன் குன்றமும் குறிப்பன முறையே..........
அ) திருப்பதியும், திருத்தணியும் ஆ) திருத்தணியும், திருப்பதியும் இ) திருப்பதியும், திருச்செந்தூரும்
ஈ) திருப்பரங்குன்றமும், பழனியும்

8. 'உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன்' என்றும் 'பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன்' என்றும் பாராட்டப்படுவோர்...........
அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன் இ) பேகன் ; கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

9. 'பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க' என்று.............வேண்டினார்.
அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக இ) கருணையன், பூக்களுக்காக
ஈ) எலிசபெத், பூமிக்காக

10. சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம்...........
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

11. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்............
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல் இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

நும் இல் போல நில்லாது புக்கு,
கிழவிர் போலக் கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

பருஉக் குறை பொழிந்த நெய்க் கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ) பரிபாடல் ஆ) முல்லைப்பாட்டு இ) மலைபடுகடாம் ஈ) புறநானூறு

13. 'இறடி' – இச்சொல்லுக்குரிய பொருள் யாது? அ) சோறு ஆ) தினை இ) இறைச்சி ஈ) அரிசி

14. மலைபடுகடாம் எவ்வகை இலக்கியத்தைச் சார்ந்தது?
அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம் இ) காப்பிய இலக்கியம் ஈ) சிற்றிலக்கியம்

15. கெழீஇ – இச்சொல்லில் உள்ள அளபெடை...............
அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) செய்யுளிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

## பகுதி – II (மதிப்பெண் – 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4 x 2 = 8
**(21 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

16. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

17. 'சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்' – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

20. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணத்தை எழுதியவர் கால்டுவெல்.
ஆ) பூவின் தோற்றநிலை அரும்பு எனப்படும்.

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 x 2 = 10

22. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?

23. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.
ஆ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

24. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

25. கலைச் சொற்கள் தருக.
அ) Nanotechnology ஆ) Myth

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்க்கான மாற்று வினா.**
**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

26. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.
(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)
அ) முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும் ; நீக்காவிட்டாலும் வாசனை தரும்.
ஆ) பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும்.

27. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ) பகைமையான.........ஐக்..............கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஆ) பொது வாழ்வில்.........கூடாது. .............இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)

28. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண் – 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

29. சோலைக் காற்றும், மின் விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30. 'ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை' என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

"போலச் செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும், குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து கொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அ) எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது?

ஆ) பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை? இ) யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 34–ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **2 x 3 = 6**

32. "சித்தாளின் மனச் சுமைகள்
செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34. அடிபிறழாமல் எழுதுக. "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல். **(அல்லது)**
"சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக.

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** **2 x 3 = 6**

35. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. வேலொடு நின்றான் இடுஎன் றது போலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

37. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 x 5 = 25**

38. 'ஆற்றுப்படுத்தல்' என்பது அன்றைக்குப் புலவர்களையும், கலைஞர்களையும், வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. **(அல்லது)**

மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39. நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.



41. எண்.10, கம்பன் தெரு, பூங்காவனம், திருப்பூர் மாவட்டத்தில் வசிக்கும் அமுதன் என்பவரின் மகன் அறிவுடைநம்பி பத்தாம் வகுப்பினை நிறைவு செய்தார். அறிவுடைநம்பி பூங்காவனம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்பு சேருவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றை ஐந்து தொடர்களில் பட்டியலிடுக. **(அல்லது)**

**ஆ) மொழி பெயர்க்க.**

Among the five geographical divisions of the Tamil country in sangam literature, the Marutham region was fit for cultivation as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient tamils.

**குறிப்பு : செவி மாற்று திறனாளர்களுக்கான மாற்று வினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அற அவையம் தனிச் சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக் கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தவை எவை? ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?
இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது?
ஈ) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பினைத் தருக. உ) தனிச் சிறப்புப் பெற்ற அற அவையமாக இலக்கியங்கள் எதனைக் குறிப்பிடுகிறது?

## பகுதி – V (மதிப்பெண் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்.** **3 x 8 = 24**

43. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக. **(அல்லது)** சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

44. அ) 'புயலிலே ஒரு தோணி' – கதையைச் சுருக்கி எழுதுக. **(அல்லது)**
ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. **(அல்லது)** ஆ) முன்னுரை – பெண் கல்வியின் இன்றியமையாமை – பெண்ணுரிமை – பெண்களுக்குச் சொத்துரிமை – மணக் கொடை – பெண்கல்வியின் நன்மைகள் – முடிவுரை.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com